பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

20 01 2025 **MONDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

1. பொம்மை உற்பத்தி தொழில்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாட்டின் வளர்ச்சிக்காக இளையோர் ஆற்றிவரும் பங்கு இன்றியமையாதது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. பல்கலைக்கழக மானியக்குழு வெளியிட்டுள்ள வரைவு நெறிமுறைகளை திரும்பப்பெற வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

4. ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. 47 பேர் களத்தில் உள்ளனர்.

5. ஆஸ்திரேலிய ஓபன் ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Krissh Tyagi** – கசகஸ்தானின் **Nurlanuly** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<>>>>>**

பொம்மை உற்பத்தி தொழில்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், சுயசார்பு இந்தியா இயக்கத்திற்கு வலுசேர்க்கும் வகையில் இதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொம்மை நிறுவனங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கி வருவதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

நாட்டின் வளர்ச்சிக்காக இளையோர் ஆற்றிவரும் பங்கு இன்றியமையாதது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் குடியரசு தின விழாவிற்கான சாரணர் படை முகாமில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்காக அனைவரும் உறுதியேற்க வேண்டும் என்றும் திரு ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

வாகன உற்பத்தியில் இந்தியா மூன்றாவது பெரிய நாடாக உருவெடுத்துள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு புபேந்திர யாதவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் சுற்றுச்சூழல் தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் வாகன உற்பத்தி நடைபெற வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

பல்கலைக்கழக மானியக்குழு வெளியிட்டுள்ள வரைவு நெறிமுறைகளை திரும்பப்பெற வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதானுக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

மாநிலங்களின் கல்விக்கொள்கைகளுக்கு முரணாக இந்த வரைவு நெறிமுறைகள் உள்ளது என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதனை திரும்பப்பெற வேண்டும் என்று வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர், அதன் நகலையும் அனுப்பியுள்ளார்.

பிஜேபி ஆட்சிப்பொறுப்பில் இல்லாத மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கும் கடிதம் அனுப்பியுள்ள திரு மு.க.ஸ்டாலின், இக்கோரிக்கையை வலியுறுத்தி சம்பந்தப்பட்ட மாநிலங்களின் சட்டப்பேரவைகளில் தீர்மானம் நிறைவேற்றுமாறு கோரியுள்ளார்.

<<<<<<>>>>>

புதுக்கோட்டை மாவட்டத்தில் கனிமவள கொள்ளை தொடர்பாக புகார் தெரிவித்த சமூக ஆர்வலர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில், கனிமவள கொள்ளை தொடர்பாக பலமுறை அவர் புகார் அளித்தாக குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில், தற்போது அவர் படுகொலை செய்யப்பட்டிருப்பது மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறியுள்ளார்.

இந்த வழக்கில் உண்மையான குற்றவாளிகளை விட்டுவிட்டு, லாரி டிரைவர் உள்ளிட்டவர்களை மட்டுமே திமுக அரசு கைது செய்திருப்பதாக அவர் குறை கூறியுள்ளார்.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய அனைவர் மீதும் உரிய நடவடிக்கையை திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

வேளாண் நிலங்களை அழித்து, பரந்தூர் விமான நிலையத்தை கொண்டுவருவது ஏற்க இயலாது என்று தமிழக வெற்றிக்கழகத்தலைவர் திரு விஜய் கூறியுள்ளார்.

பரந்தூரில் இந்த விமான நிலையத் திட்டத்திற்கு எதிராக போராட்டம் நடத்துபவர்களுக்கு ஆதரவு தெரிவித்து பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

சேலம் எட்டுவழிச்சாலையை எதிர்த்தது போல், பரந்தூர் திட்டத்தை தற்போது அரசு ஏன் எதிர்க்கவில்லை என்று அவர் வினவினார்.

எதிர்க்கட்சியாக இருக்கும்போது ஒரு நிலைபாடும், ஆளுங்கட்சியாக இருக்கும்போது மற்றொரு நிலைப்பாடும் எடுப்பது தவறானது என்றும் அவர் கூறினார்.

இயற்கை வளம் காப்போம் என்பது, தமது கட்சியின் கொள்கை என்றும் திரு விஜய் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

சென்னைக்கு புதிய விமான நிலையம் அவசியமானது என்றும், அதற்கான நிலத்தை தேர்வு செய்வது மாநில அரசின் பணி என்றும் பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், பரந்தூரில் விமான நிலையம் அமைப்பதற்கு இடத்தை தேர்வு செய்தது தமிழக அரசுதான் என்றும் கூறினார்.

இந்த விமான நிலையத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தவெக தலைவர் திரு விஜய், மாற்று இடத்தை மாநில அரசுக்கு பரிந்துரைக்க வேண்டும் என்று திரு அண்ணாமலை கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

டெல்டா மாவட்டங்களில் பெய்த மழை காரணமாக பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உரிய இழப்பீட்டினை திமுக அரசு வழங்க வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், கடந்த சில நாட்களாக பெய்த மழை காரணமாக, நாகை, மயிலாடுதுறை மாவட்டங்களில் ஒன்றேகால் லட்சம் ஏக்கர் பரப்பளவிலான நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நெல் கொள்முதலை தமிழக அரசு அதிகரிக்க வேண்டும் என்றும் திரு ராமதாசு கோரியுள்ளார்.

<<<<<<>>>>>

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

இதன்படி, திமுக, நாம் தமிழர் கட்சிகளின் வேட்பாளர்கள் உட்பட 47 பேர் களத்தில் உள்ளனர்.

இந்த இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு அடுத்த மாதம் 5-ஆம் தேதி நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை 8-ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

<<<<<<>>>>>

வானில் ஆறுகோள்கள் ஒன்றன்பின் ஒன்றாக அணிவகுத்து நிற்கும் காட்சியை நாளை முதல் பார்க்கலாம் என்று இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர் திரு த வி வெங்கடேஷ்வரன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - வெங்கடேஷ்வரன் - 70 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

தென் தமிழகம் மற்றும் வட தமிழகத்துக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 38 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருச்சி அரசு மருத்துவமனை வளாகத்தில் புதிய காவல்நிலையம் கட்டுவதற்கான பணிகளை மாநில அமைச்சர் திரு கே என் நேரு இன்று தொடங்கிவைத்தார்.

---------------

திருவண்ணாமலை மாவட்டத்தில் மண் சரிவால் பாதிக்கப்பட்ட 20 குடும்பங்களுக்கு தற்காலிகமாக அமைக்கப்பட்ட குடியிருப்புகளை பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எ வ வேலு பயனாளிகளுக்கு வழங்கினார்.

----------

கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆட்சியர் திருமதி அழகுமீனா அறிவுறுத்தியுள்ளார்.

-------------

சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வாகன பதிவெண் பலகை இல்லாத வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என்று காவல்துறை கூடுதல் ஆணையர் திரு ரவிச்சந்திரன் எச்சரித்துள்ளார்.

------------

மயிலாடுதுறை மாவட்டத்தில் ஹெல்மெட் அணியவேண்டியதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு பேரணியை காவல்துறை கண்காணிப்பாளர் திரு ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

--------------------

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே உள்ள ஜெகத்தலா கிராமத்தில் படுகர் இன மக்களின் பாரம்பரிய பண்டிகையான ஹெத்தை அம்மன் திருவிழா இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஆஸ்திரேலிய ஓபன் ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Krissh Tyagi –** கசகஸ்தானின் **Nurlanuly** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-2, 1-6, 10-4 என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் **Cruz Llyton Hewit** – குரேஷியாவின் **Duje Markovina** இணையை வென்றது.

-----------

நெதர்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச செஸ் போட்டியின் இரண்டாவது சுற்று முடிவில், இந்தியாவின் பிரக்னானந்தா மற்றும் குகேஷ் உட்பட ஐந்து பேர் கூடுதல் புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளனர்.

<<<<<<END>>>>>